# 2020 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சிறப்பு கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை :
திரு. சி. பாண்டு,
நகராட்சி பொறியாளர் மற்றும்
தனி அதிகாரி(பொ),
விருத்தாசலம் நகராட்சி.

<u>பொருள் எண். 1.</u>

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பூதாமூர் கிராமம் பழைய சர்வே எண்கள். 106/8B pt ,107/3 pt, 109/1 pt ,109/2 pt , நகரளவை வார்டு : கு, பிளாக் எண்: 32, நகரளவை எண்கள்: 28/11 pt , 30/4 pt, 32/1 pt, 3 pt ,4 pt, 6 pt – ல் 3.86 ஏக்கர் அல்லது 168141.60 சதுர அடி பரப்பளவு கொண்ட "ரெயின்போ சிட்டி" என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (ருனு(3) துறை, நாள். 04.05.2017 மற்றும் அரசாணை எண். 172, வீட்டு வசதி மற்றும் /நகர்புற வளர்ச்சி துறை (ரு(3) துறை, நாள். 13.10.2017 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2அவர்களின் செயல்முறை வழிகாட்டுதல் (Operational Guideliness) ந.க.எண். 13193/2017/எல்.ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017,03.01.2019,07.01.2019 ன்படி விழுப்புரம் மண்டலம், நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், அவர்கள் கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண். சு655/2019 என எண்ணிட்டு நாள். 09.08.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.அதன்படி மேற்படி மனைபிரிவில் ஒதுக்கப்பட்ட பூங்கா –99173.00 ச.அடி மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை மனைபிரிவு உரிமையாளரான திருமதி. ரஞ்சிதம் மற்றும் மூவர்கள் தானபத்திர எண். 2662/2020, நாள். 09.09.2020 ன் மூலம் விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர், அவர்களுக்கு அரசாணை எண் 100, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சிதுறை (UD(3) துறை, நாள். 01.07.2019 ன் படி ஒப்படைப்பு செய்து தானபத்திரம் (அசல்) இந்நகராட்சியில் ஒப்படைத்துள்ளார்கள். எனவே மேற்படி அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

.

அலுவலக குறிப்பு:

பூங்கா மற்றும் சாலைகள் ஆகிய பொது உபயோக இடங்களை அரசாணையின்படி விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களுக்கு ஒப்படைப்பு செய்துள்ளதால் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.6003/2020/எப்1)

பொருள் எண். 2.

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண். 276/2020/அ2, நாள். 18.08.2020ல் 2020—2021 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகை ரூ. 50000/— ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே 2020—2021 ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகையான ரூ. 50000/— ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களுக்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 812/2016/சி1)

பொருள் எண். 3.

விருத்தாசலம் பொது சுகாதார பிரிவில் தற்சமயம் சுய உதவிக்குழுக்களை சார்ந்த 77 தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலியாக மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் சந்தை விலை விகிதத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 395/— வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி சாலை மற்றும் மாலை இரு வேளையும் திடக்கழிவு மேலாண்மை மணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதனை தொடர்ந்து தற்சமயம் அப்பணியாளர்களுக்கான நுளுஐ மற்றும் நுஞகு தொகைக்கான நிர்வாக பங்குத்தொகை 12ரூ செலுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 289/2012/எச்1)

பொருள் எண். 4.

2020—21ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்கள் பகுதி பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரி மற்றும் பணியாளர்கள் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி ஆகியவைகளை காலாண்டுக்கு ஒரு முறை மின்னனு (E-Filling) பதிவு செய்யும் பணி கடலூர் லட்சுமி சிஸ்டம்ஸ் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிக்கு 2010—21ம் ஆண்டுக்கு தோராய செலவினம் 50000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 5.**

விருத்தாசலம் நகராட்சியில் கடை வாடகை செலுத்தும் குத்தகைதாரர்களிடம் வசூல் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவைவரி (GST) தொகைகள் ஆகஸ்ட் 2017 முதல் பிப்ரவரி 2019 முடிய வசூல் செய்யப்பட்டு அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு அதற்கான மின்னனு பதிவு ஆகியவை (E-Filling) ஆகியவை கடலூர், லட்சுமி சிஸ்டம்ஸ் பட்டய கணக்கர் திரு. து. கண்ணுசாமி அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மின்னனு பதிவு (E-Filling) செய்த பணிக்கு ஆகஸ்ட் 2017 முதல் பிப்ரவரி 2019 முடிய ரூ. 48,380/– ஐ கட்டணமாக வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண். 6.**

கடலூர் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால் வரித்துறையின் உதவி ஆணையர் அவர்கள் அறிவிப்பு எண். C.No. V/ST/15/21/2017-ST ADJN, நாள். 22.11.2017ல் விருத்தாசலம் நகராட்சியில் அசையா சொத்துக்கள் வாடகை விடும் குத்தகை இனங்களில்2012–2013 முதல் 2015–2016 முடிய உள்ள காலத்தில் வசூல் செய்யப்படவேண்டிய சேவை வரி தொகை ரூ. 2,92,18,334/– க்கான சேவை வரியாக ரூ. 39,85,349/– செலுத்திட அறிவிப்பு அனுப்பப்பட்டது. மேற்படி அறிவிப்பு தொடர்பாக பாண்டிச்சேரி மத்திய கலால் துறையில் இப்பொருள் தொடர்பாக நேரில் ஆஜராகி விருத்தாசலம் நகராட்சிக்காக உரிய பதில்கள் சமர்பிக்க பட்டய கணக்கர் திரு. து. கண்ணுசாமி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி அன்னார் மேற்றடி 2012–13 முதல் 2015–2016 முடிய உள்ள ஆவணங்களை நகராட்சியில் பெற்று அதற்கான வாதுரை (ஹககனையஎவை) தயார் செய்தும் அவ்வப்போது வடலூர் மற்றும் பாண்டிச்சேரி கலால் வரித்துரை அலுவலகத்தில் ஆஜராகி இப்பொருள் தொடர்பான விவரஙகளை தெரிவித்து வந்துள்ளார்.

மேலும் இப்பொருள் தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்திலும் வழக்கு தொடர அன்னார் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி நடவடிக்கைகளுக்கான பட்யக் கணக்காளர் கட்டணமாக முதல் தவணையாக ரூ. 1,18,000/– ஐ அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 7.

கடலூர் சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் மத்திய கலால் வரித்துறையின் உதவி ஆணையர் அவர்கள் அறிவிப்பு எண். டீ.ஊ.சூடி. 406/2019, நாள். 29.04.2019ல் விருத்தாசலம் நகராட்சியில் அசையா சொத்துக்கள் வாடகை விடும் குத்தகை இனங்களில் 2017–2018ஆம் ஆண்டு முடிய உள்ள காலத்தில் வசூல் செய்யப்படவேண்டிய சேவை வரி தொகை ரூ. 41,28,720/– க்கான சேவை வரியாக ரூ. 6,19,309/– செலுத்திட அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி அறிவிப்பு தொடர்பாக பாண்டிச்சேரி மத்திய கலால் துறையில் இப்பொருள் தொடர்பாக நேரில் ஆஜராகி விருத்தாசலம் நகராட்சிக்காக உரிய பதில்கள் சமர்பிக்க பட்டய கணக்கர் திரு. து. கண்ணுசாமி அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்படி அன்னார் மேற்றிடி 2017–18 ஆண்டுக்கான ஆவணங்களை நகராட்சியில் பெற்று அதற்கான வாதுரை (Affidavit) தயார் செய்தும் அவ்வப்போது வடலூர் மற்றும் பாண்டிச்சேரி கலால் வரித்துரை அலுவலகத்தில் ஆஜராகி இப்பொருள் தொடர்பான விவரஙகளை தெரிவித்து வந்துள்ளார்.

மேலும் இப்பொருள் தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்திலும் வழக்கு தொடர அன்னார் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனவே மேற்படி நடவடிக்கைகளுக்கான பட்யக் கணக்காளர் கட்டணமாக முதல் தவணையாக ரூ. 1,18,000/– ஐ அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 8.

விருத்தாசலம் நகராட்சியில் ஒப்பந்ததாரர்கள் பணிப்பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரி ((GST) தொகைகள் நவம்பர் 2018 முதல் பிடித்தம் செய்யப்பட்டு அரசு தலைப்பில் செலுத்தப்பட்டு அதற்கான மின்னனு பதிவு ஆகியவை (E–Filling) கடலூர், லட்சுமி சிஸ்டம்ஸ் பட்டய கணக்கர் திரு. து. கண்ணுசாமி அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி மின்னனு பதிவு (E–Filling) செய்த பணிக்கு நவம்பர் 2018 முதல் ஜுலை 2020 முடிய மாதம் ஒன்றுக்கு ரூ. 3000/– மற்றும் அதற்கான GST ரூ. 540/– சேர்த்து மொத்தம் ரூ. 3540/–ஐ 21 மாதங்களுக்கான தொகை மொத்தம் ரூ. 74340/– ஐ கட்டணமாக வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண். 9.</u>

விருத்தாசலம் நகராட்சி பொது சுகாதார பிரிவு பணியாளர்களுக்கு கொரோனா (COVID–19) தொற்று பரவாவண்ணம் தடுப்பு நடவடிக்கைக்காக தேவைப்படும் உபகரணங்களான முக கவசம் **20000** எண்ணிக்கையும், கை உறை **20000** எண்ணிக்கையும், சப்ளை செய்யும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண். **3929**, நாள். **31.08.2020**ல் அனுமதி அளித்துள்ளதற்கிணங்க, **10.09.2020**ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | பொருட்களின் விவரம் | ணுவல | சுயவந | சுள. | கூடிவயட |
|---|---|---|---|---|---|---|
| 1. | Gogreen Enter prices, India Bank, Cuddalore Port Branch. | 3 Ply Mask | 15000 | 13.50 | 212625 | 657125 (GST c£gl) |
| | | Cotton Gloves | 10000 | 39.00 | 409500 | |
| | | Latex Gloves | 5000 | 6.25 | 35000 | |
| 2. | Kentech, No. 39, Ganeshapuram Ponanur, Coimbatore. | 3 Ply Mask | 10000 | 40.00 | 420000 | 690375 (GST c£gl) |
| | | Cotton Gloves | 5000 | 7.50 | 42000 | |
| | | Latex Gloves | 15000 | 14.25 | 224438 | |
| 3. | | 3 Ply Mask | 15000 | 14.25 | 224438 | 688888 (GST c£gl) |
| | | Cotton Gloves | 10000 | 40.50 | 425250 | |
| | | Latex Gloves | 5000 | 7.00 | 39200 | |

அலுவலக குறிப்பு :

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் Gogreen Enter prices, India Bank, Cuddalore Port Branch, கடலூர் என்ற நிறுவனம் அளித்துள்ள குறைவான விலைப்புள்ளியை ஏற்கலாம்.

(ந.க.எண். 3227/2020/எச்1)

பொருள் எண். 10.

விருத்தாசலம் நகராட்சியின் பொது சுகாதாரபிரிவு 33 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வீடு வீடாக குப்பைகளை தரம் பிரித்திட திடக் கழிவு மேலாண்மை திட்டத்தில் 8 தற்காலிக ஓட்டுனர்கள்விருத்தாம்பிகை மகளிர் சுய உதவிக்குழு மூலம் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 475/— ஊதியம் பெற்று பணியாற்றி வருகின்றனர். தற்போது பொருள்கள் விலை உயர்வு காரணத்தினாலும், பொருளாதார நெருக்கடியாலும் உள்ளதால் தற்போது மாவட்ட் ஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்தரவின்படி ந.க.எண். 112/812/2020, நாள். 26.06.2020ன் படி நாள் ஒன்றுக்கு ரூ. 560/— வீதம் உயர்த்தி வழங்கிடவும் அவர்களுக்கான ESI மற்றும் EPF தொகை பிடித்தம் செய்து வழங்குவதற்கும், நிர்வாகத்தின் பங்குத்தொகை வழங்குவதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 11.

விருத்தாசலம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2020 —2021 ன் கீழ் ரூ. 8,60,000/— மதிப்பீட்டில் வார்டு எண். 16 பெரியார் நகர் அவ்வை தெருவில் ஆழ்துளை கிணறு, சிறுவிசை பம்பு , மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் அமைத்தல் பணிக்கு ( போர்வெல் ஆழம் — 455 அடி , மோட்டார் — 15 எச்.பி) மாவட்ட ஆட்சியர்,கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/1824/2020 , நாள்.20.08.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 03.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திருமதி.கே.சாந்தி,<br>ஓப்பந்ததாரர். | (—) 0.08 ரூ குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஓப்பந்ததாரர். | (+) 2.06 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திருமதி. கே.சாந்தி,ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.08 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2962 /2020/இ1)

## பொருள் எண். 12.

விருத்தாசலம் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2020 –2021 ன் கீழ் ரூ. 8,40,000/– மதிப்பீட்டில் வார்டு எண். 2 கண்டியங்குப்பம் நகராட்சி பள்ளி வளாகத்தில் உள்ள OHT அருகில் ஆழ்துளை கிணறு,மின் மோட்டார் மற்றும் உதிரி பாகங்கள் அமைத்தல் பணிக்கு (போர்வெல் ஆழம் – 455 அடி, மோட்டார் – 15 எச்.பி) மாவட்ட ஆட்சியர்,கடலூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ2/1824/2020, நாள்.20.08.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 03.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.பி.அருளாகரன், ஓப்பந்ததாரர் | (–) 0.05 ரூ குறைவு |
| 2. | திரு.ஜி.பாலசுப்பிரமணியன், ஓப்பந்ததாரர் | (+) 1.00 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.பி.அருளாகரன்,ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்ட பணியின் அவசரம் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2962 /2020/இ1)

## பொருள் எண். 13.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 80,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 13 சேக்கிழார் தெரு கிழக்கு பகுதியில் விடுப்பட்ட பகுதிக்கு சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3899, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 11.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஓப்பந்ததாரர் | (–) 0.01 ரூ குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஓப்பந்ததாரர் | (+) 0.31 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஓப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.01 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2740 /2020/இ1)

பொருள் எண். 14.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 8,15,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 7 எம்.ஆர்.கே நகரில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3902, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 11.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன்,<br>ஒப்பந்ததாரர் | (–) 0.10 ரூ குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன்,<br>ஒப்பந்ததாரர் | (+) 0.41 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.10 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2740 /2020/இ1)

பொருள் எண். 15.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 9,45,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 7 துர்கை நகரில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3903, நாள்.31.07.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 11.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | (–) 0.02 ரூ குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 0.18 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.02 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2740 /2020/இ1)

## பொருள் எண். 16.

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 5,00,000/– மதிப்பீட்டில் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின் உதிரி பொருட்கள் சப்ளை செய்யும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண். 3957,நாள்.31.08.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | ராசி அண் கோ,<br>50எப்,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (–) 0.10 ரூ குறைவு |
| 2. | ஆற்காடு எலக்ட்ரிக்ல்ஸ் ™ ஏஜென்ஸிஸ்,<br>852 , ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | (+) 0.85 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் ராசி அண் கோ, 50எப்,ஜங்ஷன் ரோடு,விருத்தாசலம். நிறுவனம் அளித்துள்ள 0.10 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2076 /2020/இ1)

## பொருள் எண். 17.

விருத்தாசலம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் ரூ. 9,80,000/– மதிப்பீட்டில் வார்டு எண் 6 வி.எண்.ஆர் நகரில் புதிய போர்வெல் அமைக்கும் பணிக்கு இந்நகரமன்ற தீர்மானம் எண்.3958, நாள்.31.08.2020ல் அனுமதியளித்தற்கிணங்க 18.09.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் | (–) 0.05 ரூ குறைவு |
| 2. | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர் | (+) 1.00 ரூ அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு.ஏ.மதியழகன், ஒப்பந்ததாரர் அவர்கள் அளித்துள்ள 0.05 ரூ குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 2076 /2020/இ1)

பொருள் எண். 18.

விருத்தாசலம் நகராட்சியில் கொரானோ வைரஸ் (COVID – 19) பராவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்ககோரி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை ,மாவட்ட ஆட்சியர், கடலூர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர்,செங்கல்பட்டு மற்றும் சார் ஆட்சியர்,விருத்தாசலம் ஆகியோர் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தியதற்கிணங்க பொதுமக்களின் நலன் கருதி கொரானோ வைரஸ் (ஊடீஏஐனு – 19) முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கீழ்கண்ட பணி மேற்கொள்ள பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்டுள்ள பணிகளுக்கு விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கூடுதலாக 8 இடங்களில் கொரானோ முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சவுக்கு மரம் கொண்டு சாரம் அமைக்கும் பணி(பகுதி – 3). | திரு.கே.சிவகுருநாதன், ஒப்பந்ததாரர், விருத்தாசலம். | 79500/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 19.

விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் கூசூ 31 ஹடு 6192 அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | விருத்தாசலம் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் வாகனம் TN 31 AL 6192 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணி | **RK Automobiles, Ponneri Byepass, Periyar nagar, Vriddhachalam.** | ரூ.20490/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 20.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட மணிமுத்தாற்றில் மாசிமக திருவிழாவினை முன்னிட்டு பொதுமக்கள் வசதிக்காக தற்காலிக ஆண்கள் மற்றும் பெண்கள் கழிவறை – 2 எண்ணிக்கை , தற்காலிக ஆண்கள் மற்றும் பெண்கள் உடை மாற்றும் அறை – 2 எண்ணிக்கை மற்றும் மின்விளக்குகள் அமைக்கும் பணியினை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என சார் ஆட்சியர்,விருத்தாசலம் அவர்களின் ஆய்வுகூட்டத்தில் தெரிவித்தற்கிணங்க பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ராசி அண் கோ , விருத்தாசலம் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு பட்டியல் தொகை ரூ. 1,59,000/– வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 21.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 வயலூர் மற்றும் வார்டு எண் 6 ஜங்ஷன் ரோடு பகுதியில் 3''மற்றும் 8'' முயவந வால்வு மாற்றும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 1 வயலூர் மற்றும் வார்டு எண் 6 ஜங்ஷன் ரோடு பகுதியில் 3''மற்றும் 8'' Gate வால்வு மாற்றும் பணி. | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | ரூ.11400/– |

அலுவலக குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண். 22.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 2 கண்டியங்குப்பம் பகுதியில் பைப்லைன் வால்வு மாற்றும் பணிக்கு குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் கீழ்கண்ட பணிக்கு உள்ளூர் விலைப்புள்ளி கோரி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி நல்ல முறையில் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு பட்டியல் தொகை வழங்கியது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | பணி மேற்கொண்ட நிறுவனம் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | வார்டு எண் 2 கண்டியங்குப்பம் பகுதியில் பைப்லைன் வால்வு மாற்றும் பணி. | ஜெயம் எலக்ட்ரிக்கல்ஸ், 27,ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம். | ரூ.26332/– |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

## பொருள் எண். 23.

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 2ல் உள்ள பழுதடைந்த சிண்டெக்ஸ் டேங்க் மாற்றி புதிய சிண்டெக்ஸ் டேங்க் வைப்பதற்கும் மற்றும் வார்டு எண். 6 முல்லை நகரில் பிரதான சாலையில் புதியதாக பைப்லைன் அமைப்பதற்கும் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,55,000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>பொருள் எண். 24.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கவேண்டிய நிலுவை பில்பட்டியல்கள் சுமார் ரூ.80.00 இலட்சத்திற்கும் மேல் நிலுவை உள்ளது. மேலும் மார்ச்–2020 மாதம் முதல் கொரானோ பெருதொற்றின் காரணமாக வரிவசூலும் இல்லாத காரணத்தினால் பொதுநிதியில் போதிய நிதி இல்லாமல் ஊழியர்களின் ஊதியம் மற்றும் நிர்வாக செலவுகளுக்கு சிரமப்பட வேண்டியுள்ளது. மேலும் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான பில்பட்டியல்களை கேட்டு ஒப்பந்தாரர்கள் தினமும் நகராட்சிக்கு வந்து கோரிக்கை விடுத்த வண்ணம் உள்ளனர். மேலும் அத்தியாவசிய பணிகளான கொரானோ முன்னெச்சரிக்கை பணிகள், குடிநீர் பணிகள்,தெருவிளக்கு பணிகள் மற்றும் எதிர்வரும் வடக்கிழக்கு பருவமழை பணிகளை மேற்கொள்ள தெரிவித்தால் நிலுவை பட்டியலை வழங்கினால் மட்டுமே மேற்படி பணிகளை மேற்கொள்வோம் என தெரிவித்து பணிகளை செய்ய மறுத்து வருகின்றனர்.இதனால் அத்தயாவசிய பணிகளை மேற்கொள்ள இயலாமல் நகராட்சிக்கு பொதுமக்களிடம் அவப்பெயர் ஏற்படுகிறது. எனவே , மேற்கொண்ட இந்த அசாதாரண சூழ்நிலையினை கருத்திற்கொண்டு வடகிழக்கு பருவமழையினால் ஏற்படும் சேதங்களை தவிர்க்க செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை தடுப்பு பணிகளை உரிய காலக்கெடுவிற்குள் சிறப்புற செய்ய வேண்டிய அவசியம் இருப்பதால் நிர்வாக நலன் கருதி காலவதியாக இருக்கும் வருவாய் வைப்புத்தொகையில் இருந்து ரூ.100.00 இலட்சத்தை மட்டும் தற்காலிகமாக பொதுநிதிக்கு மாறுதல் செய்யவும் , கொரனோ நோயினால் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையில் மாற்றம் ஏற்பட்டு போதுமான நிதி வரி வருவாய் மூலம் பொதுநிதியில் சேரும்போது மேற்படி தொகையினை மீள வருவாய் வைப்புத்தொகைக்கு மாறுதல் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மன்றம் அசாதாரண சூழ்நிலையினை கருதி காலவதியாக இருக்கும் வருவாய் வைப்புத்தொகை நிதியில் இருந்து (Deposit Account) ரூ.100.00 இலட்சத்தை மட்டும் தற்காலிகமாக பொதுநிதிக்கு மாறுதல் செய்ய இசைவு தெரிவித்து அனுமதிக்கலாம்.

**<u>பொருள் எண். 25.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் திட்டம் 2019–2020 மற்றும் 14வது நிதிக்குழு திட்டம் 2019–2020 ன் கீழ் உள்ள பணிகளில் நிலுவை பணிகளை தொடங்க இருந்த நிலையில் மேற்படி சாலைகளை ஆய்வு செய்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சாலைகள் மேடு ,பள்ளமாக உள்ளதால் அதனை சரிசெய்து நல்லமுறையில் அமைத்து கொடுக்க வேண்டும் என தெரிவித்தற்கிணங்க ,மேற்படி சாலைகளில் உள்ள பள்ள மேடுகளை சமன் செய்ய பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.